# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
## Spl.Sessions Case No. 20/2018

அ.சா.12

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | எம். குணசேகரன் | Caste: | |
| Father's Name: | மாரியப்பன் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 59 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 09.02.2026

( எதிரி ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்ட குற்ற பதிவேடு கூடத்தில் காவல்துணைக் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2016ம் வருடம் இராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடுதல் பொறுப்பாக நயினார்கோவில் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பிலும் இருந்தேன். கடந்த 27.11.2016ம் தேதி காலை 11.00மணிக்கு தியாகவன்சேரி அழகர் மகன் சோனைமுத்து என்பவர் இராமநாதபுரம் தலைமை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற தகவலை பெற்று 12.30மணிக்கு மேற்படி மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த சோனைமுத்துவை விசாரித்தபோது மேற்படியார் உடல் அதிகமாக வலி இருப்பதாலும் பேச முடியாத நிலையில் இருப்பதாலும் வாக்குமூலம் அளிக்கவில்லை என கூறினார். பின்னர் மாலை 7.00மணியளவில் நான் மீண்டும் அரசு மருத்துவமனை சென்றபோது அவர் பேச கூடிய நிலையில்

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.09 15:13:43 +0530

இருந்தார். ஆனால் எழுத்து மூலமான புகார் மனு ஒன்றை எழுதி என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவை பெற்று நயினார்கோவில் காவல்நிலைய கு.எண். 202/2016 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 342, 307 IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA)Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8**. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் அசலை இணைத்து பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுபபி வைத்தேன். மற்றொரு நகலை பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

தியாகவன்சேரியிலிருந்து நயினார்கோவில் காவல்நிலையம் 10 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 14 கி.மீ தூரம் இருக்கும். இருசக்கர வாகனத்தில் வந்தால் அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். தியாகவன்சேரியிலிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு நயினார்கோவில் காவல்நிலையத்தை கடந்துதான் வரவேண்டும் என்றால் வேறு வழிகளும் உள்ளது. நயினார்கோவில் காவல்நிலையத்திலிருந்து பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு ஒரு மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் பொது நாட்குறிப்பேடு பராமரிப்போம் என்றால் சரிதான். நான் முதன்முதலில் மருத்துவமனைக்கு 11.00 மணியளவில் சென்றபோது புகார்தாரர் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் பேசும் நிலையில் இல்லை என்பதால் கொடுக்கவில்லை. புகார்தாரரின்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.09 15:13:47 +0530

உறவினர்களோ அவருடன் இருந்த வேறு நபர்களோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடு சம்பந்தமாகவோ காயம் ஏற்பட்டது சம்பந்தமாகவோ விசாரித்தேனா என்றால் இல்லை. புகார் மனு யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் இராமநாதபுரம் மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தார் என்றால் தெரியாது. புகார்தாரர் மருத்துவர் மற்றும முக்கிய பிரமுகர்களுக்கு வாகன ஓட்டுநராக ( Acting Driver) ஆக இருந்தார் என்றால் தெரியாது. புகார்தாரர் கம்யூனிஸ்ட் கட்சியிலும்,அவருடைய சமூக த்தில் முக்கியஸ்தராக இருந்தார் என்றும் மருத்துவர் உள்ளிட்ட முக்கிய நபர்களுக்கு நன்கு அறிமுகமான நபர் என்றும் அதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டு வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நாளுக்கு முன்பாக புகார்தாரர் எதிரியை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக சொல்லி பணம் வாங்கிகொண்டு அனுப்பவில்லை என்பதால் குறிப்பிட்ட நாளில் திருப்பி தந்துவிடுவதாக எங்கள் காவல்நிலையத்தில் எதிரி கொடுத்த மனுவின் பேரில் எழுதிக்கொடுத்து சென்றுள்ளார் என்றும் அந்த மனு சம்பந்தமான விசாரணையையும் நான்தான் மேற்கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. புகாரில் சில வார்த்தைகள் இடைசெறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் சாலை விபத்தில் எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு எதிரிக்கு தரவேண்டிய பணத்தை கொடுக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக எதிரி மீது ஒரு பொய்யாக புகாரை கொடுத்தார் என்றும நான் அதை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கையை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.09 15:13:52 +0530

பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் புகார் மனு கொடுக்கவில்லை என்றும் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியால் புகார்தாரருக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.09 15:13:57 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)